සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பரதநாட்டியம் I

**அறிவுறுத்தல்கள் :**

- ❊ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❊ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட தெரிவுகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- ❊ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ❊ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நமஸ்காரத்தின் போது வணக்கம் செலுத்தப்படும் கடவுள்
(1) விநாயகர் (2) பூமாதேவி (3) நடராஜர் (4) சரஸ்வதி

**2.** அஸம்யுத, ஸம்யுத ஹஸ்தங்களின் மொத்த எண்ணிக்கை
(1) 52 (2) 56 (3) 58 (4) 60

**3.** நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பன
(1) பரத இலட்சணங்கள் ஆகும்.
(2) அபிநயத்தின் பிரிவுகள் ஆகும்.
(3) நடனத்தின் உட்பிரிவுகள் ஆகும்.
(4) தாளத்தின் உட்பிரிவுகள் ஆகும்.

**4.** முத்திரைகள் பிரயோகிப்பது,
(1) அழகிற்காக
(2) பாவத்தை வெளிப்படுத்துவதற்காக
(3) தாளத்திற்காக
(4) கருத்தைப் புலப்படுத்துவதற்காக

**5.** அம்மனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்
(1) கரகம் (2) கும்மி (3) காவடி (4) கோலாட்டம்

**6.** "மாடப்புறா அழகாக தலை அசைத்தது." இதில் மாடப்புறாவின் கழுத்தசைவினைப் பிரயோகிக்கப் பயன்படுத்தப்படும் க்ரீவா பேதம்
(1) சுந்தரி (2) பிரகம்பிதா (3) திரச்சீனா (4) பரிவர்த்திதா

**7.** "வண்டுகள் அழகாக ரீங்காரமிட்டு பறந்து திரிந்தன." இதில் வண்டுகள் என்பதனை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் ஹஸ்தம்
(1) சகடம் (2) ஹம்சாஸியம் (3) பிரம்மரம் (4) தாம்ர சூடம்

**8.** அரங்கத்தில் சபாபதி அமர்ந்திருக்க வேண்டிய திசை
(1) வடக்கு அல்லது கிழக்கு
(2) கிழக்கு அல்லது மேற்கு
(3) வடக்கு அல்லது மேற்கு
(4) வடக்கு அல்லது தெற்கு

**9.** 'ஆலய வாத்தியம்' என்று அழைக்கப்படுவது
(1) தபேலா
(2) தாளம்
(3) நாதசுரம்
(4) மிருதங்கம்

[பக். 2 ஐப் பார்க்க

**10.** த, ; தித், ; தாம் ; ; இதன் மொத்த மாத்திரைகள்
(1) 13 (2) 14 (3) 16 (4) 18

**11.** 'குஞ்சரமல்லன்' என்ற தலைமைச் சிற்பியால் கட்டப்பட்ட ஆலயம்
(1) தஞ்சைப் பெருங்கோயில் (2) கங்கைகொண்ட சோழபுரம்
(3) ஸ்ரீரங்கம் (4) சிதம்பரம்

**12.** குபேர ஹஸ்தத்தின் வலது கை முஸ்டி, இடது கை அலபத்மத்தை சூசி ஹஸ்தமாக மாற்றினால் உருவாகும் நவக்கிரக ஹஸ்தம்
(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன் (4) வெள்ளி

**13.** இந்திரனைப் போற்றி ஆடுவதாக அமைந்த வண்ணம்
(1) உக்குஸா வண்ணம் (2) ஸீரபதி வண்ணம் (3) துரக வண்ணம் (4) காறக வண்ணம்

**14.** 'பிரதிஷ்டருபேச்ச' என்பதன் தமிழ் கருத்து யாது?
(1) வினாவுதல் (2) மன்மதன்
(3) பாத்திரத்தில் நீரை ஊற்றுதல் (4) பற்கள்

**15.** கரணங்களையும் அங்ககாரங்களையும் இணைத்துச் செய்யப்படும் பூர்வாங்கம்
(1) சுத்த பூர்வாங்கம் (2) பூர்வாங்கம் (3) சுத்த உத்தராங்கம் (4) சித்திர பூர்வாங்கம்

**16.** கம்பீரமும் விறுவிறுப்பும் நிறைந்த நாட்டிய உருப்படி
(1) தில்லானா (2) கீர்த்தனம் (3) வர்ணம் (4) ஜாவளி

**17.** கோர்வை அமைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களில் ஒன்று
(1) வலம் இடமாக நகர்ந்து செல்லத் தேவையில்லை
(2) ஒரே அடவினை மீண்டும் மீண்டும் செய்தல்
(3) கோர்வையின் இறுதியில் மகுட அடவு இடம்பெறல்
(4) காலில் மென்மையான அடவுகளைச் செய்தல்

**18.** கலைமாமணி, பத்மஸ்ரீ போன்ற விருதுகளுக்குரியவர்
(1) கோபாலகிருஷ்ண பாரதியார் (2) சின்னையா
(3) சிவானந்தம் (4) வழுவூர் இராமையாபிள்ளை

**19.** வீணையில் ஒலிபெருக்கி சாதனமாக பயன்படுவது
(1) யாழி (2) சுரக்காய் (3) குடம் (4) மேற்பலகை

**20.** ஜதிகளைத் தொடர்ந்து சாகித்தியம் இடம்பெறும் உருப்படி
(1) ஸ்லோகம் (2) தில்லானா (3) சப்தம் (4) பதம்

**21.** தரு, தரங்கம், சப்தம் போன்ற உருப்படிகளைக் கொண்ட இந்திய சாஸ்திரிய நடனம்
(1) குச்சுப்பிடி (2) பரத நாட்டியம் (3) கதக் (4) மோகினி ஆட்டம்

**22.** இறைவன் முப்புரங்களையும் எரித்த போது வெற்றிக் களிப்பில் ஆடிய சபை
(1) சிற்சபை (2) சித்திர சபை (3) தாமிர சபை (4) இரத்தின சபை

**23.** சத்திரியர் என்பதனை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் ஹஸ்தம்
(1) சிகரம், சிகரம் (2) சகடம், சகடம் (3) சிகரம், மிருகசீரஷம் (4) பதாகம், சிகரம்

**24.** உருத்திரனைக் கடவுளாகக் கொண்ட ரஸம்
(1) வீரம் (2) கருணை (3) ரௌத்திரம் (4) ஹாசியம்

**25.** தம்பதியினைக் காண்பிப்பதற்குப் பிரயோகிக்கப்படும் ஹஸ்தங்கள்
(1) கர்த்தரீமுகம் - சிகரம் (2) மிருகசீரஷம் - சிகரம்
(3) மயூரம் - மயூரம் (4) மயூரம் - மிருகசீரஷம்

[பக். 3 ஐப் பார்க்க

**26.** பிடில் வாசிப்பதில் சிறந்த கலைஞராகக் கருதப்படாதவர்
(1) லால்குடி ஜெயராமன்
(2) எம். எஸ். கோபால கிருஷ்ணன்
(3) குன்னக்குடி வைத்தியநாதன்
(4) டி.ஆர். மகாலிங்கம்

**27.** சதங்கை அணிந்து வாரத்தில் ஒரு தடவை பகல் முழுவதும் முழுக் கூத்தையும் ஆடிப்பழகுதல்
(1) கிழமைக் கூத்து (2) தினக் கூத்து (3) வடமோடிக் கூத்து (4) தென்மோடிக் கூத்து

**28.** நவரத்தினமாலா என்ற ஒன்பது கீர்த்தனைகளை ஒரு ஸ்துதியாகப் பாடியவர்
(1) வழுவூர் இராமையாபிள்ளை
(2) பொன்னையாபிள்ளை
(3) ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல்
(4) தஞ்சை நால்வர்

**29.** பாத்திர பிராணன்கள் கூறும் 'வசோ' என்பதன் கருத்து
(1) பாடும் ஆற்றல்
(2) துல்லியமான உச்சரிப்பு
(3) சுற்றி ஆடுதல்
(4) சுலோகம்

**30.** மணிப்புரி நடனத்திற்கு அடித்தளம் அமைத்தவர்
(1) பாம்ஹேய்யா
(2) ஹரி நவாசின்
(3) பாக்கிய சந்திர மகாராஜ்
(4) இராஜஸ்ரீ பாக்கிய சந்திரா

**31.** கூத்துத் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - ஆரியக் கூத்து என்று அழைக்கப்படும்.
B - வியப்புச் சுவை நிறைந்தது.
C - பாரம் கூடிய கிரீடம் அணியப்படும்.
D - காலம் ஏற்றுதல் இருக்கும்.
இவற்றுள் வடமோடிக் கூத்து தொடர்பான சரியான கூற்றுகள்
(1) A, B (2) A, C (3) A, D (4) B, D

- கீழே தரப்பட்ட அட்டவணையைக் கருத்திற் கொண்டு **32** தொடக்கம் **34** வரையான வினாக்களுக்குரிய பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

| ஜாதி | தாளம் | அங்க அடையாளம் | அட்சர எண்ணிக்கை |
|---|---|---|---|
| திஸ்ரஜாதி | A | I0II | B |
| C | ஜம்பை | D | 10 |
| கண்டஜாதி | E | I0I | F |

**32.** A, B குறியீட்டுக்குப் பொருத்தமானவை
(1) துருவ தாளம் - 11 (2) துருவதாளம் - 23 (3) அடதாளம் - 10 (4) அடதாளம் - 13

**33.** C, D குறியீட்டுக்குப் பொருத்தமானவை
(1) திஸ்ரஜாதி - I ∪ 0
(2) மிஸ்ரஜாதி - I ∪ 0
(3) சங்கீர்ணஜாதி - I ∪ 0
(4) சதுஸ்ரஜாதி - I ∪ 0

**34.** E, F குறியீடுகளுக்குப் பொருத்தமானவை
(1) மட்டிய தாளம் - 8 (2) மட்டியதாளம் - 12 (3) ஜம்பைதாளம் - 9 (4) ஜம்பைதாளம் - 16

**35.** பின்வருவன சில கலைஞர்கள் தொடர்பான விடயங்களாகும்.
A - 108 கரணங்களையும் ஆராய்ச்சி செய்து அவற்றை மீண்டும் பரத நாட்டியத்தில் புகுத்திய பெருமை இவரையே சாரும்.
B - பரத நாட்டிய குலகுரு எனச் சிறப்பித்துக் கூறுவர்.
C - கனபஞ்சராகங்களில் அமைந்த தியாகராஜ சுவாமியின் பஞ்சரத்தினக் கீர்த்தனங்களுக்கு முதன் முதலில் நடனம் அமைத்தார்.
D - 1943 ம் ஆண்டு எழும்பூர் ஜகன்நாத் சபா இவருக்கு நாட்டியக் கலாநிதி என்னும் பட்டத்தை வழங்கியது.
E - கல்யாணி அம்பாளின் பிள்ளைகளான ஜீவரத்தினம், ராஜலக்சுமி ஆகியோர்கள் இவரிடம் நாட்டியக் கலையைப் பயின்றார்கள்.
மேற்குறிப்பிட்டவற்றுள் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தொடர்பான விடயங்களை மாத்திரம் கொண்ட தெரிவு
(1) A, C, D (2) B, C, E (3) B, D, E (4) C, D, E

[பக். 4 ஐப் பார்க்க

06673

- **36** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

**36.** இக்கடவுளை மையமாகக் கொண்ட ரஸத்திற்குரிய எதிர் ரஸம்

(1) சாந்தம்
(2) ஹாசியம்
(3) கருணை
(4) பீபத்ஸம்



**37.** இந்திய சாஸ்திரிய நடனங்களில் ஒன்று

(1) கதக்
(2) கதகளி
(3) ஒடிசி
(4) மணிப்புரி



**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள அஸம்யுத ஹஸ்தம்

(1) முகுளம்
(2) காங்கூலம்
(3) பத்மகோஷம்
(4) பிரம்மரம்



**39.** தஞ்சைப் பெருவுடையான் பேரிசை என்னும் நூலினை எழுதியவர்

(1) சின்னையா
(2) சிவானந்தம்
(3) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்
(4) தஞ்சை க. பொன்னையாபிள்ளை



**40.** இப்படத்தில் காட்டப்படும் பாத பேதம் யாது?

(1) சுவஸ்திகம்
(2) சமபாதம்
(3) மண்டலம்
(4) பிரம்மரீ



* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

45 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

## பரதநாட்டியம் II

※ **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) முதலாவது மண்டியடவு அமைந்துள்ள தாளம் யாது?

(ii) வாத்தியத் திரயத்தில் முதலாவதாக இடம்பெறும் வாத்தியம் யாது?

(iii) அண்ணாவியாரால் கூத்தருக்கு ஆடவேண்டிய பாத்திரத்தை எழுதி வழங்குதல் எவ்வாறு அழைக்கப்படும்?

(iv) 'இசை இயல்' எனும் இலக்கண நூலை எழுதியவர் யார்?

(v) சிவனால் சந்தியா தாண்டவம் ஆடப்பட்ட இடம் யாது?

(vi) கலியுகத்தின் இறுதியில் அதர்மத்தை அழித்து தர்மத்தினை நிலைநாட்ட மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் யாது?

(vii) தாண்டவத்தினைப் பெண்கள் மென்மையாக ஆடும் பிரயோகம் எவ்வாறு அழைக்கப்படும்?

(viii) பரத நாட்டியத்தின் அழுத்தமும் மணிப்புரியின் குழைவும் கலந்த தன்மையை வெளிப்படுத்தும் சாஸ்திரிய நடனம் யாது?

(ix) பல்லவர் காலத்தில் சிவன் ஆடிய நடனங்கள் என திருஞானசம்பந்தரால் குறிப்பிடப்படும் **இரண்டு** நடனங்களை எழுதுக.

(x) சங்ககால இலக்கியங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**2.** (i) பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் சுத்த நிருத்த வகையைச் சார்ந்த உருப்படிகளைக் குறிப்பிடுக.

(ii) நாட்டியக் கச்சேரி அமைப்பில் இரண்டாவதாக இடம்பெறும் உருப்படியின் இலட்சணத்தை எழுதுக.

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட உருப்படியின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிட்டு, அதன் நான்காவது கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

**3.** (i) கி.பி. 4 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரையான காலம் யாது? இக்காலப்பகுதியில் ஆடற்கலைக்கு மகுடமாக எழுந்துள்ள நூல் யாது?

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட நூல் கூறும் பதினொரு வகை ஆடல்களில் 4 ஆடல்கள் ஆடப்பெற்ற சந்தர்ப்பங்களை விளக்குக.

(iii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட நூலிலுள்ள ஆடற்கலை தொடர்பான சிறப்பம்சங்களை விளக்குக.

**4.** பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.

(i) சுகதுண்ட ஹஸ்தம்

(ii) கீலக ஹஸ்தம்

(iii) ஸம்புட ஹஸ்தம்

[பக். 6 ஐப் பார்க்க

**5.** (i) யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களுக்குரிய கூத்துக்களை முறையே வகைப்படுத்துக.

(ii) நாட்டுக் கூத்தின் தோற்றம் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(iii) தமிழ் நாட்டின் தென் பகுதியிலிருந்து வந்த கூத்தினைப் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு விளக்குக.

- ஆடல்
- பாடல்
- ஆற்றுகை, ஒப்பனை

**6.** (i) தொழில்சார் கிராமிய நடனங்கள் நான்கு தருக.

(ii) தொழில்சார் நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளைக் குறிப்பிட்டு, அவை எவ்வகையைச் சார்ந்தவை என்பதையும் பட்டியற்படுத்திக் காட்டுக.

(iii) பச்சைகுத்துதல், பாம்பு ஆட்டுதல் போன்ற வாழ்க்கைப் பண்புகளைக் கொண்ட மக்கள் குழுவினரால் ஆடப்படும் தொழில்சார் நடனத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

- தொழில்
- ஆடல், பாடல்
- ஒப்பனை

**7.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) தீர்மானம்

(ii) ஜாவளி

(iii) தர்மிகள்

❊ ❊ ❊